LIBRARY
17 OCT 1962
... LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 16th July 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

சேலம் இரும்புக்கனி (ஆராய்ச்சி)

*307 கேள்வி—திரு. எஸ். ஆறுமுகம் (திரு. வை. சங்கரன் அவர்கள் சார்பாக): கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் இரும்புக்கனி ஆராய்ச்சி நடத்த இதுவரை எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டது ?

(இ) சேலம் இரும்புத் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப் படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : ( ) An expenditure of Rs. 8,83,378·48 has been incurred up to 31st March 1962 on the preliminary investigations connected with the establishment of a Steel Plant in Salem district.

(இ) Pilot plant tests are currently in progress in East Germany to study the application of the low shaft furnace process for the production of iron based on Neyveli lignite and Salem ore. These tests would be completed (by middle of July 1962). The conclusions of the East German Exports would be available only after the tests are complete. On the basis of certain small-scale tests carried out at the National Mettalurgical Laboratory, Dr. Nijhawan, the Director of the Laboratory has expressed the view that the production of iron based on Neyveli lignite and Salem ore would be technically feasible. The decision regarding the time and the place of location of the Steel Project will depend on a detailed evaluation of the factors involved.

திரு. எஸ். ஆறுமுகம் : ஸார், இவ்விதம் செலவுசெய்யப்படுகின்ற தொகை மத்திய சர்க்காரால் தரப்படுகின்றதா ? அல்லது இந்த பூராத் தொகையையும் நம்முடைய மாநில சர்க்கார்தான் ஏற்றுக்கொள்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முதலடியாக நம்முடைய ராஜ்ய சர்க்கார்தான் செலவுகளை செய்யவேண்டியிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இதுவரை என்னென்ன பூர்வாங்க வேலைகள் முடிந்துள்ளன என்பதை விவரமாக அறிவிக்க வேண்டுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜெம்ஷட்பூரில் லாபரட்டரி டெஸ்ட் நடந்திருக்கிறது, இதற்கு ரூ. 2,20,000 ஆகியிருக்கிறது. இது ஒரு பூர் வாங்க வேலை. கிழக்கு ஜெர்மனியில் ரூ. 3,75,000 செலவில் பரிசோதனை

நடந்திருக்கிறது. இது ஒரு பூர்வாங்க வேலை. இப்பொழுது கனிப்பொருள்களை எடுத்து அனுப்புவதற்கும் பூர்வாங்க வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இவைதான் இதுவரை நடந்திருக்கின்ற பூர்வாங்க வேலைகள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், கிழக்கு ஜெர்மனியில் சோதனை பூர்த்தி அடைந்து அறிக்கைகள் கொடுப்பதற்கு இன்னும் எவ்வளவு காலதாமதமாகும் ? இதற்கான அறிக்கை எப்போது வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ? இதைத் துரிதப்படுத்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் நேரில் போவதற்கு ஏதாவது யோசனை உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் போவதற்கு முன்னாலேயே ரிப்போர்ட் வரும் என்று எதிர்பார்க்கின்றேன். இந்த மாதம் 15–16–ம் தேதிக்குள் கிழக்கு ஜெர்மனியில் டெஸ்ட்கள் எல்லாம் பூர்த்தியாகிவிடும். டெஸ்ட் பூர்த்தியாகி அறிக்கையைத் தயாரித்துக் கொடுப்பதற்கு 15 நாட்கள் அல்லது ஒரு மாதம் வரை ஆகும்.

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி : ஸார், நிஜாவன் அறிக்கையில் சேலம் இரும்பையும், நெய்வேலி நிலக்கரியையும் இப்போதுள்ள நிலவரத்தில் எடுத்து உபயோகித்தால் தான் லாபகரமாய் இருக்கும் என்றும், காலதாமதமானல், அன்–எக்னமிக்காகக் கட்டுபடியாகாமல் போய்விடும் என்றும் கூறப்பட்டிருப்பதாக சொல்லப்படுவது உண்மையா ? அது உண்மையானல், அதைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நிஜாவன் அறிக்கையில் இந்த மாதிரியாக எதுவும் சொல்லப்படவில்லை. அது ஒரு டெக்னிக்கல் அறிக்கையாக இருக்கிறது. சேலம் இரும்பையும், நெய்வேலி நிலக்கரியையும் உபயோகித்து இரும்பு செய்ய முடியும் என்று சொல்லக்கூடியதுதான் அவர்களுடைய அறிக்கை. லாபரட்டரி டெஸ்டைப் பற்றித்தான் அதில் முக்கியமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இந்த சோதனைகள் எல்லாம் முடிந்து ரிபோர்ட் தருவதற்கு ஏன் மாதக் கணக்கில் ஒரு சில வருடங்கள்கூட காலதாமதம் ஆகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது புதிய முறை. இதுவரையிலும் நாம் இரும்பு உற்பத்தி செய்ததெல்லாம் உயர்ந்த ரக கனி சத்துள்ள இரும்பைக் கொண்டது. அவைகளில் எல்லாம் 61, 62 சதமானம் எஃகு சக்தி இருந்தது. இப்போது நாம் சோதனை செய்வதில் 36, 40 சதமானம் தான் எஃகு சக்தி இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இதிலிருந்து நல்ல இரும்பை உற்பத்தி செய்ய முடியுமா என்ற பரிசோதனையைப் புதிதாக நடத்த வேண்டியிருக்கிறது. ஆகவேதான் இதில் காலதாமதமாகிறது. இரண்டாவது 'பிளாஸ்ட் பர்னஸ் மெதடில்' 'மெட்டலர்ஜிக் கோல்' ஐக்கொண்டு இரும்பை உற்பத்தி செய்து வந்தோம். இப்போது நம்மிடம் இடைக்கக்கூடிய 'பழுப்பு நிலக்கரியை' உபயோகித்து இரும்பு உற்பத்தி செய்ய முடியுமா என்று நாம் புதிதாக பரிசோதனை செய்யவேண்டியிருக்கிறது. ஆகவேதான் இதில் சிறிது காலதாமதமாகிறது.

திரு. பி. வி. சீராமுலு : ஸார், சேலத்தில் அமையப் போகும் இரும்புத் தொழிற்சாலையை தொட்டியம்பட்டியில் அமைக்கப்போவதாக கனம் அமைச்சர் அவர்கள் அறிவித்தார். ஆனல் இப்போது பங்களூரிலிருந்து சேலத்திற்குப் புதிதாகப் போடப்படும் ரயில் பாதை பாலக்கோடு வழியாக வருவதாகத் தெரிகிறது. ஆகவே தொட்டியம்பட்டியில் அமைக்கப்போகும் தொழிற்சாலைக்கு பாலக்கோட்டிலிருந்து திருவண்ணமலைக்கு தொட்டியம்பட்டி வழியாக பாதை அமைக்க ஏதாவது உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சேலத்தில் அமையும் என்பதே இன்னும் முடிவாகவில்லை. எந்த இடத்தில் அமைக்க வேண்டும் என்பதைப் பற்றி நிபுணர்கள்தான் சொல்ல முடியும். கனம் அங்கத்தினர் அவர்கள் கூறின தொட்டியம்பட்டியில் 'அலாய் ஸ்டீல்' தொழிற்சாலை ஒன்று ஆரம்பித்து இருக்கிறோம்.